# இஸ்லாமிய திருமனம் மஹர்

**மஹர் வசதிக்கேற்றவாறு வழங்கலாம்.**

## 1. பணம்

நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்கள் மனைவியருக்கு 12.5 ஊகியா (சுமார் 500 திர்ஹம் அதாவது 6500 ருபாய் வரை) மஹர் வழங்கியதாக அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் தெரிவிக்கிறார்கள்:

அறிவிப்பாளர்: அபூஸலமா (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூது, அஹ்மத், நஸயீ, இப்னுமாஜா)**

## 2. நகை (தங்கம், இரும்பு)

நாயகத் தோழர் அப்துர் ரஹ்மான இப்னு அவ்ஃப்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தங்கத்தில் ஒரு சிறு அளவை தம் மனைவிக்கு மஹராகக் கொடுத்தார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

ஒரு இரும்பு மோதிரத்தையாவது மணப்பெண்ணுக்கு மஹராகக் கொடுத்து மணமுடியுங்கள் என நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: ஸஹ் இப்னுஸகத் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

## 3. தோட்டம்

ஸாபித் இப்னு கைஸ்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் மனைவி ஒரு தோட்டத்தையே மஹராகப் பெற்றிருந்தார் (சுருக்கம்)

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு

**(ஆதாரம்: புகாரி, நஸயீ)**

## 4. கல்வி புகட்டல்

அண்ணல் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நாயகத் தொழர் ஒருவர் மஹர் கொடுக்க வசதியே இல்லாதபோது அவருக்குத் தெரிந்த குர்ஆனின் சில அத்தியாயங்களை மணப்பெண்ணுக்குக் கற்றுக் கொடுப்பதையே மஹராக நிர்ணயித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸஃது(ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

## 5. அடிமைத்தழையிலிருந்து விடுதலை

ஒரு அடிமையை உரிமைவிட்டு அதையே மஹராக அறிவித்தார்கள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மவர்கள்.

அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸபிய்யா (ரலியல்லாஹு அன்ஹா என்னும் பெண் போர்க்கைதியை விடுதலை செய்து அதையே மஹராக அவர்கள் மணந்து கொண்டார்கள்.

## 6. இயலாதோருக்கு காலணிகள், பேரீத்தம் பழங்கள்

இயலாதோருக்கு காலணிகள், பேரீத்தம் பழங்கள், துணிமணிகள் தேவ்யான பொருட்கள் போன்றவற்றையும் மஹராக வழங்கலாம் என்பதை நாயக மொழிகள் அறிவிக்கின்றன.

ஒரு பெண்மணிக்கு காலணிகளை வழங்கி திருமணம் செய்ய அனுமதித்துள்ளார்கள்.

அறிவிப்பாளார்: ஆமிர் இப்னு ரபீஆ (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: திர்மிதி, அஹ்மத், இப்னுமாஜா)**

### 7. இஸ்லாத்தை தழுவுதல்

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதையே மஹராக நிர்ணயித்திருப்பதை இஸ்லாம் வரவேற்கிறது.

நாயகத்தோழி உம்மு ஸுலைம் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், அபூதல்ஹா என்பவர் தம்மை மணம் செய்ய விரும்பியபோது 'நீர் முஸ்லிமானால் அதுவே எனக்கு மஹராகும் அதைத்தவிர வேறு எதையும் மஹராகக் கேட்க மாட்டேன்' எனக் கூறினார்கள்.

'இஸலாத்தை ஏற்பதையே மஹராக இருந்தது' என அவரது மகன் அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஆதாரம்: நஸயீ)

(இஸ்லாத்தை தழுவுவதே தனக்கு மஹராகும் என உலகில் அறிவித்த ஓரே பெண் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.)

### மஹரில் வரையறை இல்லை

மஹர் என்பதற்கு சில ஊர்களில் சில வரையறைகளை வகுத்துள்ளார்கள். அதிகப்படியாக கொடுக்க விரும்பினாலும் அதை சில ஊர் ஜமாஅத்தினர் அனுமதிப்பதில்லை. 51 ரூபாய், 97.5 ரூபாய், 101 ரூபாய் என மஹ்ரை நிர்ணயம் செய்திருப்பது வேதனைக்குரியதாகும். திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஆணும் பெண்ணுமே மஹரைப் பற்றிப் பேசிக் கொள்ளவேண்டுமே தவிர மற்றவர்கள் மஹரை நிர்ணயிக்க முடியாது.

'மறரைப் பற்றி பேசவும் கூட்டவும் குறைக்கவும் தகுதி பெற்றோர் மணமக்களே 4:24 மறைவசனம் தெரிவிக்கிறது.

### மஹரின் உரிமை

பெண்தான் மஹரைக் கேட்க வேண்டும். அந்த உரிமையை இஸ்லாம் அவளுக்கு வழங்கியுள்ளது. மணமகன் மஹ்ரை கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதால் அவள் கேட்கும் தொகையை அவன் கொடுத்தாக வேண்டும்.

உம்மு ஸுலைம்(ரலியல்லாஹு அன்ஹா) அவர்களே மஹரை முடிவு செய்த ஹதீஸ் மூலம் மஹரை தீர்மானிக்கும் உரிமை பெண்களுக்கே உரியது என்பதை புரிந்து கொள்ளலாம்.

## (குறைவே)மஹரின் அளவு

எதையும் எளிதாகச் செய்ய வேண்டுமென விரும்பும் இஸ்லாம், மஹரையும் குறைவாக இருப்பதே சிறப்பிற்குரியது. அது எளிய மக்களுக்கு ஒரு சுமையாகி விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கிறது.

'குறைவான மஹரே மிகச் சிறந்தது' என பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடுள்ளதாக உக்பத் இப்னு ஆமிர் (ரலியல்லாஹு அன்ஹா) அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: அபூதாவூது. ஹாக்கிம்.

எனினும் அவரவர் வசதிக்கேற்ப கொடுப்பதில் தவறில்லை இருப்பவர் தாராளமாகக் கொடுக்கலாம்.

இரும்பு மோதிரம் முதல் தங்கப்புதையல் வரை கொடுக்கலாம்.

ஒரு (கின்தாரை) பொற்குவியலை (மஹராகக்) கொடுத்தாலும் அதிலிருந்து எதையும் எடுக்காதீர்கள் அல்குர்ஆன் 4:20 என்ற வசனத்தின் மூலம் ஒரு பொற்குவியலையும் மஹராக வழங்கலாம் எனத் தெரிந்து கொள்ளலாம்.